# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2022.08.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்)

***1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** *இவ்வாசகம் 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 5அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் இத்திருத்தத்தின் சட்டப்பயனானது, சிறுகோரிக்கை நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகளை மாகாணங்களின் மேல் நீதிமன்றம் கேட்பதனை இயலச்செய்வதாகும்.*

## *மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்)*

*ச.வ-ஓ. 62/2021*

### *1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

***1.*** (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் 5அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

***2.*** 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 5அ என்னும் பிரிவு பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தினால் அல்லது குடும்ப நீதிமன்றமொன்றினால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தினால், குடும்ப நீதிமன்றத்தினால் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றமொன்றினால்” என்னும் சொற்களையும் அத்துடன் “அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தால் அல்லது குடும்ப நீதிமன்றத்தால்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தால், குடும்ப நீதிமன்றத்தால் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றத்தால்” என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''மாவட்ட நீதிமன்றமொன்றின் அல்லது குடும்ப நீதிமன்றமொன்றின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக அவை காணப்படும் இடங்களி

லெல்லாம், "மாவட்ட நீதிமன்றமொன்றின், குடும்ப நீதிமன்றமொன்றின் அல்லது சிறுகோரிக்கை நீதிமன்றமொன்றின்" என்னும் சொற்களை இடுவததன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "மாவட்ட நீதிமன்றங்களிலும் குடும்ப நீதிமன்றங்களிலிருந்தும் வரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாவட்ட நீதிமன்றங்களிலும் குடும்ப நீதிமன்றங்களிலும் மற்றும் சிறுகோரிக்கை நீதிமன்றங்களிலிருந்தும் வரும்" என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.